
குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சுபானு ஆவணி — SEPTEMBER 1943.



( ஆதீன மடாலயத்தில் பண்டாரக்காடு )

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தில்
இருபத்து நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## பத்தாண்டு ஆட்சிப் பாராட்டு மலர்

வாழ்க நின்னறம் வாழ்க நின்னருள்
வாழ்க நின்மடம் வாழ்க நின்பெயர்
வாழ்க நின்குடை வாழ்க நின்கொடை
வாழ்க சண்முக தேசிக வாழ்கவே!

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சுபானு௵ ஆவணி மீ<br>SEPTEMBER 1943 | இதழ் 10 |
|---|---|---|

இதழாசிரியர்:—
தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


## உள்ளுறை


1. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சி விழா

முதல் நாள் நிகழ்ச்சி— I

இரண்டாம் நாள் நிகழ்ச்சி—
தருமபுர ஆதீன வித்துவான் வபிரகாசம்
"பாலகவி" வே. இராமநாதஞ் செட்டியார் அவர்கள். VII

மூன்றாம் நாள் நிகழ்ச்சி—
தாம்பரம், திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள்,
சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக்கழகப் பிரசாரகர். X

2. குற்றம் நீக்கிக் குறையொழிக்கும் திருப்பாடல்—
தருமபுர ஆதீனப் புலவர்,
வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், திருவாரூர். 319

3. நமனால் முனிவுண்பது எற்றுக்கோ ?
வித்துவான். த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.
தஞ்சை. 324



[illegible]

[illegible]

உ

குருபாதம்

திருக்கயிலாயப் பரம்பரைத் தருமபுர ஆதீனம்

24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

# பத்தாண்டு ஆட்சி விழா

தருமபுர ஆதீனத்தில் 24-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சியேற்றுப் பத்துவருடங்கள் ஆகின்றன. இந்தச்சொற்பகாலஅளவில் இவ்வாதீனத்தில் அவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்களும் அறப்பணிகளும் மிகப்பலவாம். அவைகளை விரித்துரைக்கப்புகின் விரியும்.

இதனையுணர்ந்த மாவூர் சர் R. S. சர்மா C. I. E., நெடும்பலம் இராவ்பகதூர் N. R. சாமியப்பமுதலியார் அவர்கள் இவ்விரு பெருமக்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சிப் பூர்த்தியை ஓர் விழாவாகக் கொண்டாட எண்ணங்கொண்டு 10-6-43ல் மாயவரம் நகராண்மைக்கழகக் கட்டிடத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டினார்கள். அதில் இந்தப் பக்கங்களிலுள்ள பல பிரமுகர்களும் வந்திருந்தனர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் காலத்தில் செய்திருக்கும் சேவையைப் பாராட்டி ஓர் விழா நடத்துவதென்று தீர்மானித்துத் தமிழ் நாட்டில் சுமார் 194 பெருமக்களை விழாக்குழுவினராகத் தேர்ந்தெடுத்தனர். எல்லாக்காரியங்களையும் உடனிருந்து பார்க்க உயர் திருவாளர்கள், மாவூர் சர். R. S. சர்மா, C. I. E., நெடும்பலம் இராவ்பகதூர். N. R. சாமியப்ப முதலியார், மாயவரம் நகராண்மைக் கழகத் தலைவர் C. கனகசபைச்

செட்டியார், மாயவரம் தாசில்தார் S. ராமச்சந்திர அய்யர், மாயவரம் நகராண்மைக்கழக ஆட்சியாளர், A. கோபாலகிருஷ்ண அய்யர், கொரநாடு K. S. சுந்தரஞ் செட்டியார், மாயவரம் S. K. Bros., S. இரத்தினம் பிள்ளை, மாயவரம் வழக்கறிஞர், N. வைத்திநாத அய்யர், ஏனாதிமங்கலம் இராவ்சாகிப், E. N. சோமசுந்தரம் பிள்ளை, திருக்கடவூர், K. கனகசபைப் பிள்ளை ஆகிய இவர்கள் காரியக்கமிட்டி அங்கத்தினர்களாகவும், மாயவரம் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. C. கனகசபைச் செட்டியாரவர்கள் காரியக்கமிட்டியின் நிர்வாகஸ்தராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

## ஏற்பாடுகள்

மாயவரம் தரங்கம்பாடி கற்சாலையிலிருந்து தருமபுரத்திற்குக் கிளைப்பாதை ஒன்று பிரிகிறது. அது கோணலாக இருந்தது. அதனை நேராக்கி ஒரு புதுப் பாதை செப்பஞ் செய்யப்பட்டது. அதன்நுழைவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் பத்தாண்டு ஆட்சியின் ஞாபகார்த்தமாக ஒரு அழகான வளைவு கட்டப்பட்டது. அதன் இரு புறங்களிலும் அழகிய வளைவுச் சுவர்கள் கட்டப்பெற்றன. தருமபுரம் மேல வீதியில் ஒரு பெரிய அழகிய கொட்டகை அமைத்து அதில் மின்னொளி விளக்குகள் தொங்கவிடப்பட்டன. ஊர்முழுவதும் தெருக்கள் சுத்தஞ்செய்து புதுக்கி அழகு செய்யப்பட்டது. வருவோர் தங்கும் விடுதிகளுந் திட்டம் செய்து வைக்கப்பட்டன. பல ஊர்களிலிருந்தும் யானைகள், நாட்டியக் குதிரைகள், ஒட்டைகள் முதலிய பலவிருதுகளும் வந்து சேர்ந்தன. சுகாதாரத்திற்கு வேண்டிய பலவசதிகளும் செய்துவைக்கப்பட்டிருந்தன. அழகான பிரசங்க மேடை ஒன்றமைத்து பல்லாயிரக் கணக்கான மக்களும் வசதியாக இருந்து கேட்க ஒலி பெருக்கிகளும் அமைக்கப் பட்டிருந்தன. வேண்டுவோர்க்குக் குளிர்பானங்களும் வழங்கப்பட்டன. தென்

ணிந்தியாவிலுள்ள பிரபல பத்திரிகைகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். செட்டிநாட்டிலிருந்து சாரணப் படையினரும் வந்து வேண்டும் உதவிபுரிந்தனர்.

4—9—43 சனிக்கிழமையன்று ஆதீனநிர்வாகத்துக்குட்பட்ட தேவஸ்தானங்களில் இறைவனுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறச்செய்து ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. மறுநாள் அருச்சகர்கள் யாவரும் வீபூதிப்பிரசாதத்துடன் மடாலயத்திற்கு வந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைக்கண்டு சென்றார்கள்.

## முதல் நாள் 5—9—43 ஞாயிற்றுக்கிழமை

இன்று விழா ஆரம்பம். திருவாங்கூர் சமஸ்தான திவான் சச்சிவோத்தம சர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் K. C. S. I., K. C. I. E., LL. D., அவர்கள் தலைமை பூண்டார்கள். தலைவரவர்களை பத்தாண்டு ஆட்சி வளைவிலிருந்து மிகவிமரிசையாக வரவேற்கப்பட்டது. தலைவரவர்கள் ஆதீன மடாலயத்திற்கு வந்து சேர்ந்ததும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தைக்கண்டு அளவளாவிக் களித்தனர். அவ்வமயம் அங்கு வந்திருந்தஏராளமான சிறுவர் சிறுமியர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

மாலை 4 மணிக்குக் கூட்டம் தொடங்கப்பட்டது. சென்னை முதலிய நெடுந்தொலைவிலிருந்தும் நாலாபுறங்களிலிருந்தும் பல பெருமக்களின் கூட்டம். முதலில் தலைவரவர்களுக்கு ஆதீன மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் சார்பில் ஆதீனத் திருக்கூட்டத்தாருள் ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புப் படித்துக் கொடுத்து ஆதீன நால்நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த வரவேற்புப் பத்திரம் ஒரு அழகிய வேலைப் பாடுமிக்குள்ள தந்தப் பேழையில் வைத்து அளிக்கப் பட்டது. பிறகு கொண்டாட்ட விழாக் குழுவினரின் சார்பில் அக்குழுவின் நிர்வாகஸ்தர், திரு. C. கனக சபைச் செட்டியாரவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்துப் பாராட்டு வளைவையும் திறந்து வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்துக்கு மாயவரம் நகராண்மைக் கழகத்தினர் சார்பில் அதன் தலைவர் திரு. C. கனகசபைச் செட்டியாரவர்களும், கொண் டாட்ட விழாக் குழுவினர் சார்பில் திருக்கடலூர் திரு. K. கனகசபைப் பிள்ளையவர்களும், சீகாழி நகரவாசிகள் சார்பில் சீகாழி பெருநிலக்கிழார் திரு. C. கிருஷ்ண மூர்த்தி முதலியாரவர்களும், மாயவரம் சாரணச் சிறுவர் சங்கத்தின் சார்பில் அச்சங்கக் கமிஷனர் திரு. T. P. சீனிவாசன், B A., L. T., அவர்களும், பிறையாறு நகர சபைச் சார்பில் அவ்வூர் திரு. ஜம்புகேச நாடார் அவர் களும், மாயவரம் நகராண்மைக் கழக ஊழியர் சங்கச் சார்பில் (மானேஜர்) திரு. ஜகந்நாதம் பிள்ளையவர் களும் வாழ்த்துரைகள் படித்துக் கொடுத்தனர். பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் நிர்வாக நேர்மையினை யும் அவர்களின் குணாதிசயங்களையும் பற்றிச் சீகாழி பெருநிலக்கிழார் இராவ்பகதூர் C. சீனிவாச முதலியார் அவர்களும் கொண்டாட்ட விழாக் குழுவின் அமைப் பாளர் நெடும்பலம் இராவ்பகதூர் திரு. N. R. சாமி யப்ப முதலியாரவர்களும் சிறப்புரைகள் மொழிந்தனர். சென்னை இந்துசமய அறநிலையக் கழகத் தலைவர் திவான்பகதூர் திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை யவர்கள் பத்தாண்டு ஆட்சி மலர் வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டிருந்ததை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத் தினிடம் சமர்ப்பித்து அதிலுள்ள விஷயங்களை ஒரு வாறு சுருங்கக்கூறி முடித்தனர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் உத்திரவுப்படி ஸ்ரீ அருணந்தித்

தம்பிரான் சுவாமிகள் எல்லாவற்றிற்கும் பதிலிறுக்கும் முகத்தான் வாழ்த்துரைகள் வழங்கிய சங்கங்களுக்கும், சிறப்புரை பேசிய பெருமக்களுக்கும், அவையில் குழுமியுள்ள எல்லாருக்கும் ஆதீன ஆத்மார்த்த பூஜா மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கத்தின் அருள்சுரக்கப் பிரார்த்தித்து ஆசிமொழிந்தனர். பிறகு தலைவரவர்கள், தாம் முன்பு வழக்கறிஞர் என்ற தொழில் முறையில் வந்திருந்தபொழுது கண்ட தருமபுரம், தாம் கேள்விப் பட்டிருக்கிறபடி, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் நிர்வாக காலத்தில் அமைந்திருக்கும் பெரும் விளக்கங்களையும், செய்யப்பட்டிருக்கும் பல சீர்திருத்தங்களையும் ஒவ்வொன்றும் எடுத்துக் காட்டுவதாயும், தாம் இங்குப் பல வழிகளிலும் முன்னேற்றத்தையும் தீர்க்காலோசனையையும் காண்பதாயும் பாராட்டிப் பேசினார்கள். மொழித்தகராறு பரவு மிக்காலத்தில் நமது ஆன்ற முன்னோர்களின் செய்கையை யோசிக்குமிடத்துத் தாயுமானவரைப் போன்ற அருள் வழிப்பட்ட பெருமக்கள் உண்மைத் தத்துவங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டார்களே யொழிய மொழித்தகராறுகளை ஏற்றுக் கொள்ளவில்லை யென்பதை அப்பெரியார் அருளிய பாடல்களிலிருந்து இருபாடல்களை உதாரணமாக எடுத்துக்காட்டியும் விளக்கினார்கள். திருவாங்கூர் சமஸ்தான ஆட்சிக்குட்பட்ட வற்றுள் சுமார் 15 லக்ஷம் தமிழ் மக்கள் இருப்பதாகவும் அவர்களுக்குச் சைவ சித்தாந்த உண்மைகளைப் பரப்ப பல பிரசாரகர்கள் தேவையென்றும் மொழிந்து முடித்தனர். கொண்டாட்ட விழாக் குழுவின் மற்றொரு அமைப்பாளர் மாவூர் சர். R. S. சர்மா C. I. E., அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் ஆட்சி நலத்தைப் பாராட்டிப் பேசிவிட்டுத் தாம் இரண்டு தினங்களுக்கு முன் சென்னை மகிமை தங்கிய கவர்னரவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபொழுது இவ்வாதீனத்தைப் பற்றியும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் அருட்செயல்களைப்பற்றியும் பேச வாய்ப்புஏற்பட்டதாயும் அதனைக்

கேள்வியுற்ற கவர்னர் துரை அவர்கள் எழுதிக் கொடுத்த வாழ்த்துரை ஒன்று தாம் கொண்டுவந் திருப்பதாயும் சொல்லி, அதனை அவையின்கண் வாசித்தளித்தார்கள். அவையில் பெருமகிழ்ச்சிக் கடை யாளமாக ஆரவாரங்கள் நிகழ்ந்தன.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கரா சாரிய சுவாமிகள் ஒரு வாழ்த்துத் திருமுகம் மடத்து மரியாதைகளுடன் அனுப்பியிருந்தனர். திருப்பனந் தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஒரு பாராட்டுரை அனுப்பியிருந்தனர்.

திருவையாறு பஞ்சாயத்துபோர்டு, சென்னை தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், சென்னை சைவா சாரியர் சங்கம், கமலைத் தமிழ்ச் சங்கம், குடந்தைத் தமிழ்ச் சங்கம், காழிக் கல்விக் கழகம், மாயவரம் தமிழ்ச் சங்கம், செட்டிநாட்டரசர் Dr. இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், சர். P. T. இராஜன், Bar-at-law, ரெட்டயம்பாடி ஜமீன்தார், கலாக்ஷேத்திர ருக்மிணிதேவி அருண்டேல், திவான்பகதூர் பிரும்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், வடபாதிமங்கலம் இராவ்பகதூர் V. S. தியாகராஜ முதலியார் M.A., சீகாழி பெருநிலக்கிழார் சுப்பராய முதலியார், தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தலைவர் V. நாடிமுத்துப் பிள்ளை, அக்கழக உதவித் தலைவர் பூண்டி, வீரய்யா வாண்டை யார், தேவகோட்டை திருமான், O. Rm. M. Sp. Sv. M. மெய்யப்ப செட்டியார் போன்ற பல பெருமக்களிட மிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம், தலைவரவர்கள், கொண்டாட்டவிழாக் குழுவினர் அடங்கிய புகைப் படம் ஒன்றுபிடிக்கப் பட்டது. பிறகு கொண்டாட்ட வளைவும், ஆதீன நூல் நிலையக்கட்டிடங்களும் தலைவ ரவர்களால் திறந்து வைக்கப்பட்டன. நூல்நிலைய

அமைப்பைப் பார்த்துப் பெருமிதங் கொண்டதோடு பல அரிய நூல்கள் இருப்பதைக்கண்டு தலைவரவர்கள் மகிழ்ச்சி கூறினார்கள். வந்திருந்தோர்க்கு விருந்தளிக்கப்பட்டதும் திருவாங்கூர் சமஸ்தான நடன கலா வல்லபர் திரு. கோபிநாத் கோஷ்டியார் நடனத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

## இரண்டாம் நாள் 6—9—43 திங்கட்கிழமை

[தருமபுர ஆதீன வித்துவான், "பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்.]

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக்கழகத் தலைவர், திவான்பகதூர். T. M. நாராயணசாமிப் பிள்ளை M. A., B. L., அவர்கள் தலைமையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருமுன்னர் காலை 10-மணிக்கு விழா நிகழ்ச்சி தொடங்கியது.

ஓதுவாமூர்த்திகளாலும், ஆதீன தேவார பாடசாலை மாணவர்களாலும், திருவிடைமருதூர் தேவார ஆசிரியர் வித்துவான் மு. நடராஜ தேசிகர் அவர்களாலும், சிதம்பரம் தேவார ஆசிரியர் இராமலிங்க ஓதுவார் அவர்களாலும் திருமுறைஓத, விழாக்கொண்டாட்டக் குழுவின் நிருவாகஸ்தரும், மாயூரம் நகராண்மைக் கழகத் தலைவருமாகிய திருவாளர், C. கனகசபைச்செட்டியார் அவர்கள் விழாக் கொண்டாட்டக் குழுவினரின் சார்பாகத் தலைவரவர்களுக்கு வரவேற்புரை படித்து வழங்கினார்கள். தலைவரவர்கள் முகவுரையில் நம்மவர்கள் ஆதீனங்களிலிருக்கின்ற குரு மகா சந்நிதானங்களின் அருளுக்கு இலக்குடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதனையும், அவ்வாறே குரு மகாசந்நிதானங்களும் மக்களிடத்து எல்லாவகையிலும் அன்புடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதனையும், அத்துறையில் நமது மகாசந்நிதானம் அவர்கள் முன்னணியில் நின்று நம்மால் கொண்டாடப்பெறும் செவ்விவாய்ந்திருக்

கின்றார்களென்பதையும் நன்கு எடுத்துக்கூறி, கோவை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் களால் எழுதப்பெற்று, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கருணைச் செயல்கள் பலவற்றுள் ஒன்றின் வடிவமாக விளங்கும் **திருநாவுக்கரசு சுவாமிகள் புராண விரிவுரையை** அரங்கேற்றும்படி வேண்டினார்கள்.

திரு, சிவக்கவிமணியவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் அருட்டிருநீறு பெற்று விரிவுரை நுட்பங்கள் சிலவற்றையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வெளியீட்டுப்பணிக்குச் செய்த பேருபகாரச் செயல்களையும் எடுத்து விளக்கினார்கள். சென்னை சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி திருவாளர், M. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களும், காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் செயலாளர் திருவாளர், க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்களும் விரிவுரையிற் காணும் சிறப்புக்களையும், அதன் ஆசிரியர் சிறப்புக்களையும் பற்றிப் பேசினார்கள். பின் பகலுணவுக்குக் கூட்டம் கலைந்தது.

பிற்பகல் நான்கு மணிக்கு மாலைநிகழ்ச்சி தொடங்கப் பெற்றது. சுமார் புலவர்கள் முப்பதின்மர் தாங்கள் எழுதிவந்த வாழ்த்துப் பாடல்களைச் சந்நிதானம் அவர்களுக்கு உரிமையாக்கித் திருநீறு பெற்றுக்கொண்டனர்.

திருவாளர்கள்,

1 க. வச்சிரவேல் முதலியார் அவர்கள்,
கணித ஆசிரியர், பச்சையப்பன் உயர்தரப் பள்ளி, காஞ்சிபுரம்

2 வித்துவான் ஔவை,
சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
சித்தாந்த போதகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இருவாளர்கள்,

3 வித்துவான்,
இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,
விரிவுரையாளர், அரசர் கல்லூரி, திருவையாறு.

4 வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
தமிழாசிரியர், போர்டு உயர்தரப் பள்ளி, திருவாரூர்.

5 வித்துவான்,
வை. மு. சண்முக தேசிகர் அவர்கள்,
தமிழாசிரியர், நாஷனல் உயர்தரப் பள்ளி, நாகை.

6 வித்துவான்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
ஆராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

7 வித்துவான்,
வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், கார்ப்பரேஷன் உயர்தரப் பள்ளி, சென்னை.

என்ற ஏழு அறிஞர்களுக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீனத் தமிழ்ப் புலவர் என்ற பட்டமும், இசையரசு, தேவாரமணி M. M. தண்டபாணி தேசிகரவர்களுக்குத் "தருமையாதீன இசைப் புலவர்" என்ற பட்டமும் அளித்து அவ்வவர்கள் பெயர்கள் பொறிக்கப் பெற்ற பொற் பதக்கங்களும் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

பின்னர் மாயூரம் நகரத்துள்ள பள்ளிக்கூடத்தில் நடந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பத்தாண்டு ஆட்சி விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளனைவருக்கும் சிறந்த பல பரிசுகள் வழங்கப் பெற்றன. தலைவரவர்களின் உயரிய முகவுரைக்குப் பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரையை தருமையாதீன அடியார் குழாத்துள் ஒருவராகிய ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் படித்தார்கள்.

இரவு 9-மணிக்குக் கோகிலகான இசைவாணி M. S. சுப்புலட்சுமியின் இசையரங்கு நிகழ்ந்தது. இயல் இசை விருந்துகளும், உணவு விருந்தும் நுகர்ந்த அனைவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணைத் திறத்தை நினைந்து வியந்து பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

## மூன்றும் நாள் 7—9—43 செவ்வாய்க்கிழமை

[தாம்பரம், திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள்.]

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டசந்தானத்துத் திருத்தருமபுர ஆதீன 24-ம் பட்டத்தமர்ந்து சைவ சமய வளர்ச்சி, தமிழ்மொழி வளர்ச்சிகளையே தமது அரும் பொழுது போக்காகக் கொண்டு விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னர் மாயவரம் நகராண்மைக் கழகத் தலைவர் திருவாளர் C. கனகசபைச் செட்டியார் அவர்கள் தலைமையில் காலை 10-மணிக்குத் தேவாரத் திருமுறை ஓத மூன்றும்நாள் நிகழ்ச்சி தொடங்கியது. வரவேற்புரை கொண்டாட்ட விழாக் குழுவின் காரியக் கமிட்டி அங்கத்தினர் K. கனகசபைப் பிள்ளை அவர்களால் வாசிக்கப்பெற்றது.

தலைவரவர்கள் அவ்வரவேற்புரைக்குக் கூறிய விடையில், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருஞ் செயல்களைப் பாராட்டித் தமக்கும் ஆதீனத்துக்கும் உண்டாயிருக்கும் தொடர்பினால் விளையவல்ல நன்மைகள் பலவற்றையும் சுருங்கச்சொல்லி விளங்க வைத்தார்கள்.

பின்னர், பழநி வேதசிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர் காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியரவர்கட்குச் "சைவசித்தாந்த சரபம்" என்னும் பட்டம் அளிக்கப் பெறுவது சம்பந்தமாக, தருமை யாதீனத் தமிழ்

புலவர்கள் எழுவரும், கோயம்புத்தூர் வழக்கறிஞர் திரு. சிவக்கவி மணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களும், சென்னை தாம்பரம் பூ. சமர்புரி முதலியார் அவர்களும், வேதாரண்யம் பிரதோஷ மடம் அதிபர் திருவாளர் சுப்பையா பட்டாரகர் அவர்களும், தேவகோட்டை "பாலகவி" இராமநாதன் செட்டியார் (தருமை யாதீன வித்துவான்) அவர்களும் சிவாசாரிய ருடைய சைவ சாத்திரப் போதகாசிரியத் திறனையும், தருக்கநியாய வாயிலாகப் புறச் சமயங்களை நிராகரிக்குந் திறனையும், "சைவ சித்தாந்த சரபம்" என்னும் சிறப்புப்பெயர் தாங்குவதற்குரிய தகுதிப் பாட்டினையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் பேசிமுடிக்க, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவாசாரியர் அவர்கட்குப் பொன்னுடை சாத்திச் "சைவ சித்தாந்த சரபம்" என்னும் பட்டம் வழங்கி, அச்சிறப்புப் பெயர் பொறிக்கப்பெற்ற பட்டயத்தையும் அளித்து ஆசி கூறினார்கள்.

பின்னர், சிவாசாரியர் அவர்கள் தம்முடைய நன்றியைத் தெரிவிக்கு முறையில், சைவ சித்தாந்த சமயத்தின் உயர்வையும் சாத்திரக் கருத்துக்களையும் ஒரு சில கூறி, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் நற்றொண்டையும் பாராட்டிப் பேசினார்கள்.

திருவாரூர் இலக்கண விளக்க ஆசிரிய பரம்பரை வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர் அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வாழ்த்துப்பா வாசித்துக் கொடுத்து அவர்கள் தந்தையார் எழுதிய 17-ம் நூற்றாண்டுப் புலவர்கள் என்னும் தமிழ் நூலின் இரண்டாவது பதிப்பின் வெளியீட்டை இவ்விழாவின் நினைவாகத் தமிழுலகத்திற்குக் கொடுப்பதாகக் கூறி, வெளியிட்ட முதற் பிரதியைச் சந்நிதானம் அவர்கட்குச் சமர்ப்பித்தார்கள்.

தலைவர் அவர்களின் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த முடிவுரைக்குப் பின், ஆதீன அடியார் குழாத்துள் ஒருவராகிய ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆணைப்படி ஆசி கூறினார்கள்.

தலைவரவர்கட்கும் மற்றுமுள்ளோ ரனைவர்கட்கும் மாயவரம் வழக்கறிஞரும் கொண்டாட்ட விழா காரியக் குழுவின் உறுப்பினருமான பிர்மஸ்ரீ வைத்திநாதையர் B.A., L.T., வந்தனோபசாரங் கூற காலை நிகழ்ச்சி முடிவு பெற்றது.

மாலை 6-மணிக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனிருக்க ஆதீனப்புலவர் குழாங்கள் அனைவரையும் புகைப்படம் பிடிக்கப்பட்டது. பின்னர் **தருமை யாதீன இசைப்புலவர் M. M. தண்டபாணி** தேசிகர் அவர்களால் இசையரங்கு நடைபெற்றது.

பின் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செம்பொன்னார்கோவில் நாதசுர வித்துவான்கள் கோவிந்தசாமி, தட்சிணாமூர்த்தி ஆகிய இருவர்கட்கும் **“தருமை யாதீன நாதஸ்வர வித்துவான்”** என்னும், சிறப்புப் பெயர் வழங்கிப் பொற் பதக்கங்களும் அளித் தருளினார்கள்.

இரவு 8-மணிக்கு ஸ்ரீமதி S. D. சுப்புலட்சுமி கோஷ்டியாரின் நாட்டிய அரங்கு நடைபெற்றது. இரவு 11-மணிக்குப் பல சிறப்புகளோடு பட்டணப்பிரவேசத் திருவிழா நிகழ்ந்தது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளால் வந்திருந்த மக்கள் அனைவரும் தங்கள் தங்களுக்குரிய வகையில் பெரும் பயன் பெற்றார்கள் என்பது சொல்லவும் வேண்டுமோ?

## ஆவணிமூலத் திருநாள் (8-9-43)

**பட்டமளிப்பு.**

"பொன்னவிர் கடுக்கை புரிசடைப் புங்கவன், அமையாக்காதல் இமயவல்லிக்கு, வழிபடல் முறைமை விழுமிதின் உணர்த்தத் தானே தன்னைப் பூசனைபுரிந் தென, அருத்தியோ டெம்மை நம் உருத்திரகணங்கள், தெரித்துமற் றிவ்வா றருச்சனை புரிதிரென், றங்கயர்க் கண்ணி பங்கில்வீற் றிருந்த, செக்கர் வார்சடை சொக்க நாயகனை, ஈரெண் திறத்துப சாரமும் வாய்ப்பப், பூசனை புரியும் தேசிகராய" ராம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் காலையில் சொக்கலிங்க மூர்த் திக்கு விசேட பூசை செய்து தேவகோட்டை வயிநாகரம் "பாலகவி" வே. இராமநாதன் செட்டியார் அவர்கட்கு ஆசிகூறி, திருநீறு தந்து **"தருமை யாதீன வித்துவான்"** என்னும் சிறப்புப்பெயர் வழங்கி, அப்பெயர் பொறித்த பொற்பதக்கமும் அளித் தருளினார்கள்.

மாலை 4-மணிக்கு மாயவரம் நகரத்திலுள்ள பள்ளிக் கூட மாணவ மாணவிகட்குத் தின்பண்டங்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுருவமைந்த பதக் கங்களும் (Medalians) வழங்கப்பட்டன. ஸ்ரீ சொக்க நாதப் பெருமான் திருமுன்னர் இரவு 7-மணிக்குப் பூசைமடத் தொட்டிக் கட்டு மண்டபத்தில் தருமை ஆதீன சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்கள் தலைமையில், சென்னை ஸ்ரீமதி காஞ்சனமாலை அம்மையார் அவர்கள் **மணிவாசகர் வரலாறு** பற்றியும், தருமை ஆதீன வித்துவான் பால கவி இராமநாதன் செட்டியார் அவர்கள் **திருவாசகச் சிறப்பு** என்பது பற்றியும், தாம்பரம் திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் **மணிவாசகரும் சைவ வாழ்க்கையும்** என்பது பற்றியும், தருமை ஆதீன சைவப் பிரசாரகர் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் **திருக் கோவையார்** பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள்.

திரு. ஆடூர் ஆ. சு. கணபதிப் பிள்ளை அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருநாரையூர் சிவாலயத்தில் மெய்கண்ட சந்தானசாரியர்களையும் சேக்கிழார் சுவாமிகளையும் பிரதிட்டை செய்ததைப் பற்றியும் அது சம்பந்தமாகத் தாமியற்றிய சித்திரக் கவியைப் பற்றியும் விளக்கிப் பேசினார்கள். ஆதீன தேவார, வேத சிவாகம பாடசாலை மாணவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணைப்படி ஆதீன அடியார் குழாத்துள் ஒருவராகிய ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் கீழ்க் கண்டவாறு பரிசுகள் வழங்கப்பட்டன.

தேவாரப் பாடசாலை மாணவர்கள்

முதற் பரிசு. S. தண்டபாணி. அப்பர் தேவாரம்.
2-வது பரிசு. G. முருகையன். நீதிநெறிவிளக்கம்.
3-வது பரிசு. S. குருசாமி. சித்தாந்த சைவவினாவிடை.

வேதசிவாகம பாடசாலை மாணவர்கள்

முதற் பரிசு. M. ராஜம். அப்பர்தேவாரம்.
2-வது பரிசு. V. சந்திரசேகரன். நீதிநெறிவிளக்கம்.

பின் தலைவரவர்கள் தாங்கள் திருநாரையூருக்குச் சென்று முற்கூறிய பிரதிட்டைகளைக் கண்டுகளித்ததைப் பற்றியும் பேசி, சிறந்த ஆராய்ச்சியமைந்த முடிவுரை கூறினார்கள். இறுதியாக அண்ணாமலைப் பல்கலைக்கழக சங்கீதபூஷணம் (வீணை) T. P. A. முத்துக் குமாரசாமி நல்வீணை இசைத்து இசை இன்பத்தை ஊட்டினார்.

9—9—43 வியாழக்கிழமை இவ்விழாவின் பகுதியாக ஆயிரக் கணக்கான ஆதித்திராவிட மக்களுக்கு முழுக்கு எண்ணெ அளித்து விருந்தும் அளித்தருளப்பட்டது அதுகாலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனிருந்து இன்முகத்துடன் அருள்பாலித்தார்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியிறைய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

## குற்றம் நீக்கிக் குறையொழிக்கும் திருப்பாடல்

புண்ணியம் பாவம், நன்மை தீமை, குற்றங் குறை யென்பன துணைச் சொற்களாக வழங்குவன. இவற்றுள் கொள்வதும் தள்ளுவதுஞ் சேர்ந்த வழக்குகள் சில. தள்ளத்தக்கதே சேர்ந்துவந்தது குற்றம் குறை என்ற வழக்கு. குற்றங் குறைகள் ஒழியவேண்டும். மக்கள் மாயை வன்மையால், அறியாமை மேலீட்டால் குற்றங் குறைகளைச் செய்கின்றார்கள். அவர்கள் இவை குற்றம் குறை என்ற உணர்ச்சி யடைவார்களே யாயின் ஒரு போதும் செய்யார்கள். ஆதலால் செய்பவர்களுக்கு இது தெரியாது. ஆக அவர்களால் ஒழிக்கவும் முடியாது. குற்றங் குறைகள் தாஞக ஒழியும் தரத்தினவும் அல்ல. ஆதலால் இவற்றை ஒழிப்பான் ஒருவன் வேண்டும். ஒழிப்பவன் குற்றங் குறைகள் இல்லாதவஞக இருக்க வேண்டும். அவன் அங்ஙனம் ஒழிக்க நம் முயற்சியும் சிறிது வேண்டப்படுவது. நோயுடையவன் சென்று

சிறிதேனும் வேண்டிக் கொண்டால் அல்லது மருந்துடைய வைத்தியன் வலிய மருந்தளிப்பதில்லை. அத்தகைய முயற்சியோ நமக்குத் திருவருள் வசமாகக் கிடைக்கவேண்டும். அங்ஙனம் முயற்சி கிடைத்தபோது சமயங் காத்த காழிக் குழந்தையின் திருமுறைக் கருவூலம் நம் கையின்கண்ணிருக்கும். அதனைத் திறந்து நோக்கத் திருப்புகலூர்ப் பதிகம் நம் கண்ணிற்படும். கண்பெற்றபேறு, கருத்துடையபேறு பெறுவோம். அப்பாடல்கள் பத்தும் குற்றங் குறையொழிக்கும் பாடல்களாக, புகழ் புண்ணியம் அளிக்கும் அருந்துணையாக இருப்பதை அவர்கள் வாக்கினின்றே அறிவோம். அறிந்த நமக்கு "குற்றமின்றிக் குறைபா டொழியாப் புகழோங்கிப் பொலிவாரே" என்ற திருக்கடைக் காப்புப் பாடற்பகுதி அடிக்கடி நம் சிந்தையிற்றோன்றி இன்பத்தேன் சுரக்கச் செய்யும்.

இத்தகைய நற்பயன் நல்கும் பாடல் பத்தையும், சுவைத்துய்யவேண்டும் என்ற பெருவிருப்பு உண்டாகும். அங்ஙனம் படிக்கின்ற காலத்துப் புகலூர்ப் பொலிவு ஒரு பக்கம்; இறைவன் எழில் உருவம், வீரம், அருளுமியல்பு இவை ஒருபக்கம் காட்சி தந்து மனத்தைக் கனிவிக்கும். இந்த அருட் பாடல்களில் அழுந்தியவர்களுக்கு ஆன்ம போதம் எங்கே? இல்லாத ஆன்மபோதத்தால் இயற்றப் படுவன குற்றங் குறைகளாமோ?

**புகலூர்ப் பொலிவு:—** ஞானசம்பந்தப் பெருமான் திருவாயிற் புகலூர்ப் பொலிவு காண்பதற்கு முன் நமது சேக்கிழார் பெருமான் திருவாயால் வந்த வரலாற்றுப் பொலிவும் மறத்தற்கியலாது. அது 'ஞானசம்பந்தப் பெருமான் திருப்புகலூருக்கு எழுந்தருளுகிறார்கள். முன்னரே அருள்ஞானக்கிழவர் அப்பரடிகள் முருக நாயனரோடு முதல்வனடிவணங்கித் திருமடத்து எழுந்தருளி யிருக்கிறார்கள். குழந்தை ஞானசம்பந்தம் எழுந்தருளுதலை இருவரும் கேள்வியுற்றனர். எல்லை சென்று

எதிர்கொண்டழைக்கின்றனர். திருமடத்திற்குச் சென்று தங்கி அளவளாவி இருக்கின்றனர். அளவளாவுதல் என்னவாயிருக்கக்கூடும். சிவபோகச் செல்வர் எதனைப் பற்றிச் சிந்திப்பர். பிற்காலத்துச் சிவபோகச் செல்வர் ஒருவர் கூறுவதுபோல "பரியாப் பரிவதனைப் பார மறப் பார்ப்பவர்கள் அறியாது அறிவதனை, அருளுலகக் கட்டியினை, தெரியாத் தெரிவதனைச்" சிந்தியாது சிந்தித்துக்கொண்டிருந்திருப்பார்கள். இவர்களுடைய அளவளாவலின் பொருணயத்தை புகலூர்ப் புண்ணியர் தாம் அறிவர். முருகனாரறிவர். சிறுத்தொண்டர் திருநீலநக்கர் செவிமடுத்தின்புற்றிருப்பர். ஒருநாள் திருக்கோயிலுக்கு மூவரும் சென்று வழிபட்டு நிற்கும் போது ஞானசம்பந்த வள்ளல் வாயினின்று வழிந்த அமுதப் பாடல் இது என்பது வரலாற்றுப் பொலிவு.

**இயற்கைப் பொலிவு:—** திருப்புகலூர் பொழில் சூழ்ந்தது. பொழில் புயல் சூழ்ந்தது. பொறிவண்டுகள் சூழ்ந்தன. அம்மட்டோ! போகம் வைத்த பொழில். அப்பொழிலின் நிழலில் ஆனினங்கள் மதுவைக் குடிக்கின்றன. இங்ஙனம் இயற்கை நலங்கெழுமிய புகலூர் தெய்வ நலத்தாலும் திகழ்கின்றது. இறைவன் திருக்கோயில் 'பொன்னிலங்கு மணிமாளிகை'. அம்மாளிகையும் பொன்னிற மாளிகை மதியைச் சூடிப் புனிதன் தோற்றத்தைத் தந்து நிற்கின்றது. விழவோசையும், முழவோசையும், அடியார் தோத்திர ஓசையும் அகலாதது என்று பலவகைகளால் காட்டியுள்ளார்கள்.

**புகலூர்ப் பெருமக்கள்:—** 'பொய்யில்லாத மனத்தார்' பொய்-அசத்தாகிய பிரபஞ்சம். அப்பிரபஞ்ச வாதனைப் பற்ருத திருவுள்ளம் அங்குள்ள பெருமக்கள் திருவுள்ளம். மற்றும் அவர்கள் "குடிமைத் தொழில் மல்கும் அடியார்" என்று கூறப் பெறுவது சிந்திக்தற்குரியது. தத்தங் குடிநிலைக்கேற்ற கொள்கைகளினின்றும் சிறிதும் தவறுவதில்லை. இத்தகைய அடியார்களுடைய

நாள் முயற்சி, "கொய்து பத்தர் மலரும் புனலுங் கொடுதூவித் துதிசெய்து, மெய் தவத்தின் முயல்வார்" என்று கூறப் பெற்றுள்ளது. அது பூக்கொய்தலும், திருமஞ்சன மாட்டுவித்தலும், அருச்சித்தலும், தோத் தரித்தலும் செய்து உண்மைத் தவத்தை உஞற்று பவர்கள் என்பதனை அறிவிப்பது. அங்ஙனம் முறை யான் வழிபட்டார் எய்தும் பயன் "உயர் வானகம் எய்துவது" என்பது.

**இறைவன் இயல்புகள்:—** முதற்கண் நம்மையெல் லாம் வசிப்பது கைம்மாறு வேண்டாப் பெருங்கருணை. அதனை யறிவிப்பன "சேரும் அடியார்மேல் பையநின்ற வினை பாற்றுவர், போற்றிசைத்து என்றும் பணிவாரை மெய்யநின்ற பெருமான்" "பெரியார் கழலென்றுந் தொழுதேத்த உண்ணிலாவி யவர் சிந்தையுள் நீங்கா ஒருவன்" என்பன. இவற்றுள் முதற் பகுதி இடை விடாது திருவடிக் கமலங்களில் சிந்தையைச் சேர்த்து நிற்கும் அடியார்கள் இருவினைகளையும் தாமறிந்து நுகர்பொழுதறிந்து பையப்பைய போக்குவார் என்றும், திருமுன் போற்றிப் பணிந்து நிற்கும் அடியாரிடத்து மெய்யாக நிற்பார் என்றும் விளக்கி நிற்கிறது. இரண் டாம் பகுதி பெரியாராகிய அடியார் கடமை கழல் ஏத்தவேண்டியது ஒன்றுதான். இறைவன் கருணை அவர்கள் மனத்து எழுந்தருளிப் பின்னர் பிரியா திருக்கின்ற பெருமையே என்று பேசப்பட்டுள்ளது. இவற்றால் சுருக்கமாக, இறைவன் கழலேத்தும் செல் வத்தைப் பெற்றால் பையப்பைய வினையகற்றி அவர் சிந்தைவிட்டு நீங்காது எழுந்தருளுவர் என்பது குறிக் கப் பெறுகின்றது.

மற்றும் இறைவன் திருவுரு தியானிப்பார் நெஞ் சகத்துத் திகழ, ஒரு காதில் சங்ககுண்டலமும், ஒரு காதில் காதணியும் உடையன் என்று கூறும் பகுதி '**காதிலங்கு குழையன்**' என்பது. குழை என்பது பெண்

காதணி, ஆண் காதணியாகிய சங்ககுண்டலம் இரண்டையும் உணர்த்தும் பொதுமொழி ஆதலால் இறைவன் ஒரு திருச்செவியில் குழையையும் ஒரு திருச்செவியில் குண்டலமும் அணிந்து இருக்கின்றார். அவ்வாறே, "இழைசேர் திருமார்பன்" என்பதும். இழை-ஆபரணம். பூணுநூலிழை. பெண் பாகத்து ஆபரணங்களையும், ஆண் பாகத்து நூலிழையையும் அணிந்துள்ளார். இவ்வாறு பொருள் காணவேண்டும் என்ற அமைதியை அறிவிக்கும் அடுத்த பகுதி "ஒரு பாகம் மாதிலங்கும் திருமேனியினன்" என்பது. இவ்வாறே செய்ய மேனியில் வெண்ணீறு விளங்கும் என்றும், திருமுடிமேல் நீர் உறையும் என்றும், மதிசூடி என்றும், நாகம் வைத்த முடியான் என்றும் பலவாறாக நவிலப் பெறுகின்றனர். திரிபுரம் தீமடுத்த வீரமும், இராவணன் நெருங்க விரலூன்றிய வீரமும் விளக்கப்பெறுகின்றன.

நெறியல்லாப் புறச்சமயம் பொருந்தாது அகச்சமயத் தலையாம் சித்தாந்தப் பெருநெறி பிடித்தார்க்கே அருளுவான் என்பது காட்ட "செய்தவத்தவர் மிகு தேரர்கள் சாக்கியர் செப்பிற் பொருளல்லாக் கைதவத்தவர் மொழியைத் தவிர்ப்பார் கடவுள்" என்று அருளியது சைவ உறைப்பில்லாச் சிறியருந் தேர்ந்து உறுதி கொள்ளச் செய்யும் உரையாகும்.

இங்ஙனம், இப்பாடல் பத்துமே எல்லார் உள்ளத்தும் இனிப்பன. சம்பந்தராணைவழிநின்று காழியுண் ஞானசம்பந்தன் மாலையைப் பற்றவேண்டும். என்றும் இசையோடு பாடவேண்டும். அங்ஙனம் பாடிய மாந்தர்களுக்கே முற்காட்டிய பயனெல்லாம் எய்தும் என்பது அறிந்தின்புறுதற்கு உரியன.

[தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், வி[illegible] காப்பிய [illegible]
திரு. ச. தண்ட[illegible] தேசிகர் அவர்கள், தி[illegible]

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நமனால் முனிவுண்பது எற்றுக்கோ ?

[வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, அவர்கள், தஞ்சை]

நமன், யமன், காலன், கூற்றுவன், சமன் என்பன ஒருபொருளைத்தரும் பல சொற்கள் ஆயினும், சிறு சிறு வேறுபாடும் உண்டு. காலன் உயிர்கள் உடலோடு கூடி வாழும் நாட்களின் எல்லையை கணக்கிடுபவன். கூற்றுவன் உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன். சமன் நடுநிலை திறம்பாத துலாக்கோல் போன்றவன்; சிறிதும் கண்ணோட்ட மில்லாதவன் என்றபடி. பெரும்பாலும் யமனைக் குறித்தே இச் சொற்கள் வழங்கப் படுகின்றன. முனிவு-கோபம். முனிவுண்பது-கோபிக்கப் படுவது. எற்றுக்கோ-எதற்காகவோ? எனவே, யமனால் கோபிக்கப்படுதல் எதன் பொருட்டு என்பதே இங்கு நாம் ஆராய எடுத்துக் கொண்ட பொருள். நாம் நமனால் கோபிக்கப் படுவதற்குக் காரணமே இல்லை; நாம் என்றது இங்கு உயிர்ப்பன்மை குறித்தது. "நாம் உளோம்; கற்றைச் செஞ்சடையான் உளன். கற்றுக் கொள்வன வாய் உள; நா உள; இட்டுக்கொள்வன பூ உள; நீர் உள; (ஆதலால்) நமனால் முனிவுண்பது எற்றுக்கோ?" 'கற்றைச் செஞ்சடையான் உளன்'; 'நாம் உளோம்'; என்று இறைவன் உளனே; அன்றே உயிர்ப்பன்மைகளும் உள. இறைவன் ஏகன். ஆன்மா அநேகன். உயிர்களெல்லாம் இறைவனுக்கு மீளா அடிமைகள். இறை பணி நிற்ற லொன்றே அவ்வுயிர்களின் கடமை. செம்பிற் களிம்புண்டு; அரிசிக்குத் தவிடுண்டு; இவைகட்கு அவை எப்போதுண்டாயின எனக் கூறவொண்ணாது. அதுபோலவே ஆன்மாவுக்கு ஆணவமலம் அநாதிக் காலத்திலேயே யுண்டு; இடையில்

வந்ததன்று. இதனை "பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்—பதியினைப்போல் பசு பாசம் அநாதி" என்பர் திருமந்திரமாலை யுடையார். நமது குமர குருபர சுவாமிகளும் "எஞ்ஞான்றுளை யுளம் அஞ்ஞான்று யாமே" எனப் பண்டார மும்மணிக் கோவையில் அருளிச் செய்வாராயினர். முதல்வனைப் போன்று உயிர்கள் என்று முள்ளன; அறிவுடைப் பொருள்களே எனினும், முதல்வன் இலக்கணங்களையும் உயிர்களின் இலக்கணங்களையும் அறிந்தாலன்றி வேறுபாடு தோன்றா. உயிர் தலைவன் முதல்வன். அவர் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர், எல்லாம் செய்பவர், என்றும் மகிழ்ச்சி யுடையவர், தம் வயமுடையவர். ஆன்மா மீளா அடிமை. ஆன்மாவுக்குள்ள இலக்கணங்கள் ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொன்றாய் இந்திரியங்களினால் அறிதல்; அறியப்பட்டவற்றை மீள மறத்தல்; ஒருவன் உணர்த்த உணர்தல்; இவ்வாறு அறிகின்ற தன்னையும் தானறியாமை; சுதந்தர அறிவின்றி அறிவிக்க அறியும் தன்மை யுடைமை முதலியன. இதனை "அறிந்திடும் ஆன்மா ஒன்றை மற்றொன்றால் அறித லானும், அறிந்தவை மறத்தலானும் அறிவிக்க அறிதலானும், அறிந்திடும் தன்னையும் தான் அறியாமை யானும் தானே, அறிந்திடும் அறிவன் அன்றாம் அறிவிக்க அறிவன் அன்றே." எனச் சிவஞான சித்தியாரில் அருளிச்செய்வர் நம் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். முதல்வன் இலக்கணமும், மீளா அடிமை இலக்கணமும் ஒருவாறு ஆராய்ந்தோம்.

இனி, அடிமைத்திறம் செய்வது எவ்வாறு? முதல்வன் அருளிய விதிவிலக்குகளை யறிந்து விலக்கியன ஒழிதலும் விதித்தன செய்தலும் ஆம். விதி விலக்குகளை அறிந்து செய்யும் திறமுடையன மானிட உடலெடுத்த உயிர்களே. மற்றைய உடலெடுத்த உயிர்கட்கு அவை கூடா. ஆதலால், மக்கட்பிறவி யெடுத்தல்

ஒருயிர்க்கு மிக மிக அரிது. 'கடலைக் கையினல் நீந்தினன் காரியங்காண்' என இவ் அருமை நோக்கிக் கூறினர் நம் அருணந்திசிவம். மக்கள் உடம்பெடுத்த உயிர்கள் எல்லாம் தம்மொடு தொடர்புடையாரிடத்தே பெரும்பான்மையும் அன்பு செய்வன. இதனையே பாச அன்பு என்று கூறுவர். இவ்வன்பு முதிர முதிரத் தம்மோடு தொடர்பில்லாத உயிர்களிடத்தெல்லாம் சென்று சென்று சேரும். இதனையே பசு அன்பு என்பர். இவ்வன்பு முதிர்ந்த பெருநிலையில் இறைவனிடத்து அன்பு செலுத்தும் நிலை வரப்பெறும். பதியன்பென இதனையே கூறுவர். இப்பதியன்பு பல பிறவிகளிற் செய்த நல்வினைகளின் பயனைத் தோன்றும். பொறியுணர்வுடன் மனத்தாற் கருதவரும் பயன் பெற்ற மக்கள் உடம்பெடுத்தார் முதன்முதலில் தாயிடத்தும், தந்தையிடத்தும் அன்பு செய்வர். பின் உடன் பிறந்தார், சுற்றத்தார் முதலியோரிடத்தும்—மனைவியிடத்தும் — மைந்தரிடத்தும் வரவர விரிந்த அன்புடையோராவர். அவர் தனக்கு உணவுதேடுதலிலும், மனைவி மைந்தர் பொருட்டு உணவு தேடுதலிலும், சுற்றத்தாரைப் பேணலிலும் பொழுது கழிப்பிப்பர். எடுத்த உடம்பு இவ்வரும் பெருஞ் செயலின் பொருட்டே யென அம்மட்டில் உணர் வெய்தப் பெறுவர். சானும் வளர்க்க அவர்படும் பாடு சற்றல்ல. பொதுவாக அவர், தம் உடல் ஓம்பலினும், பிறருடல் ஓம்புவித்தலினுமே எண்ணத்தைப் பெருக்குவர். இது உலக எண்ணம். தன்னைப்பற்றிய எண்ணம் பின்னர் தலைப்படும். அதன் பின் தலைவனையுணரும் எண்ணம் தலைப்படும். ஒவ்வொரு சுவையையும் தனித்தனி இன்பம் எனக்கருதிய உயிர், பெண்களிடமாக நுகரும் ஐம்புலனும் ஆரத்துய்க்கும் சிற்றின்பத்தையே பெரிதாக மதிக்கும். அரசச் செல்வத்துடன் அரசு கட்டிலிலேறி முரச முழுங்கத் தனி முடிகவித்தாளும் தனித்த வின்பத்தையே பெரிதெனக்கொள்ளும். இவைகளையெல்லாம் நுகர்ந்து நுகர்ந்து உவர்ப்பேறத் 'தன்னைவிடத் தனக்கு இனி

யார் எவருமில்லை' யெனத் தேரும். அவ்வுறுதியிலும் இடர்ப்பாடுகளைக் கண்டவிடத்தே 'என்னினும் இனி யான் ஒருவன் உளன்' என்ற உறுதி உயிர்க்குண்டாம். அவ்வினியான் யாண்டுளன் எனத்தேர்ந்து உள்ளும் புறம்பும் உயிர்ப்பாய், ஒன்றாய் வேறாய் உடனாகி நிற்பன் எனத் தெளியும். அவ்வாறு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று உபகரிக்கும் முதல்வனை வழிபடுதற்கே இவ்வாக்கையை இறைவன் உபகரித்தனன். இவ்வுபகாரத்தை இத்துணைக்காலம் மறந்து கெட்டொழிந்தேனே என்று வழிபாட்டிற்றலைப்படும். 'வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் சூழ்த்த மாமலர் தூவித் துதிக்க'த் தொடங்கும். பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றும். நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவிற்றும். அகவழிபாடு புறவழிபாடுகளிற் றலைப்படும். புறவழிபாட்டைக் கிரியை என்பர். அகவழிபாட்டை யோகம் என்பர். சரியையாவது தாதமார்க்கம் எனப்படும். பூதி திருவேடம் போற்றல், பூங்காவனஞ் சமைத்தல், பூமாலை புண்ணியற்குச் சாத்தல், ஆலயத்திற் சென்று அலகிடல், திருமெழுக்கிடல், திருவிளக்கேற்றல், சென்று சென்று வணங்கல், கோயில் பல சமைத்தல், புதுக்குவித்தல் முதலியன சரியையி லடங்குவன. புகை, ஒளி, மஞ்சம், பூ, திருவமுது, அடைக்காய் முதலியன தூயனவாய்த்தேடி ஐவகைச் சுத்தியுஞ் செய்து சிவாகம விதிப்படி பூசித்தல் கிரியை யெனப்படும். இதனைப் புத்திரமார்க்க மெனவும் புகல்வர். இறைவனது அருவத் திருமேனியை அகத்தில் வழிபடல் சகமார்க்கமாம். இவைகளின் விரிவை யெல்லாம் சிவஞான சித்தியார், துகளறுபோதம் முதலிய அருணூல்களிற் கண்டு தெளிக. 'கற்றைச் செஞ்சடையான்' என அடையாளங் கூறியது பற்றிச் சிறிது சிந்தித்தல் வேண்டும். செஞ்சடையிலே, இளம்பிறை கொன்றை கங்கை பாம்பு முதலியன உள. கதிபெற வேண்டுவார் யாரும் 'இறைமைக் குணமிக்க தம்மையடைந்தாலன்றி

உய்விலர்' என்பதைத் தெரிவிப்பது இளம்பிறையணிந்த தோற்றம். 'பிரணவப் பொருள் தாமே' என்பதை அப்பிரணவ வடிவாகவுள்ள கொன்றையைத் தமக்குரிய அடையாள மாலையாகக் கொண்டுண்மை விளக்குகின்றது. செருக்கடங்கினோரே சிரத்தானமாகற் பாலர் என்ற பேருண்மையை விளக்குவதாம். மிக இழிந்த பொருளாயினும் இறைவனருள் சேரப் பெறின் மேம்பாடுற்று விளங்கு மென்பதைக் காட்டுவதாம். எனவே, அநாதிக் காலந் தொடங்கி ஆணவ மலத்தாற் கட்டுண்டு அணுத்தன்மை யெய்திய உயிர்கள் பிறப்பிறப்பிற் பட்டுச் சுழன்று வருந்துதலை யொழியப் பேரின்ப வடிவாகவும், மங்கல வடிவாயிருந்து தம்மை யடைந்தாருக்கு மங்கலத்தைச் செய்பவராகவுமுள்ள சிவபிரானே முழுமுதற் கடவுளெனத் தேர்ந்து மலர்கொண்டருச்சித்துப் பஞ்சாக்கர மந்திரத்தைச் செபித்து வழிபாடாற்றக் கடவன். வழிபாடாற்றுதற்கு வேண்டும் உபகரணங்க ளெல்லாம் தேடுதல் முடியாதாயினும் யாண்டும் பச்சிலையும் பூவும் நீரும் உள்ளன. அவைகளைக் கொண்டேனும் வழிபாடாற்றலாமே. "மொட்டறு மலர் பறித்திறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்தருள் செய்யும் சித்தனே" என்ற திருவாசகமும் உணரத்தக்கது. பச்சிலையும் பூவும் பத்தியாயிட்டு அருச்சித்தலே சிறந்தது. பத்தியின்றி யமையாதது. பத்தியில்லாத பூசையாற் பயனின்று. இதனையே, 'பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு — நக்குநிற்பன் அவர் தம்மை நாணியே' எனக் கூறுதல் காண்க. காலகாலனாகிய நமது சிவபிரானை ஏத்தி வழிபடுவாரைக் காணின் யமனும் அஞ்சுவன். இதுகாறுங் கூறியவாற்றால் சிவபெருமானுடைய திருவடித் தொண்டர்கள் நமனுடைய முனிவுக்குச் சிறிதும் ஆளாகமாட்டார்களென்பதாம்.

# விலைப்பட்டி

| | | விலை. | அஞ்சற் செலவு |
|---|---|---|---|
| | | அ. பை. | அ. பை. |
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | 8—0 | 3—0 |
| 40 | சித்தாந்த சைவ வினாவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோயில் வரலாறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக் கோயில் வரலாறு | 2—6 | 0—9 |
| 48 | திருக்கடவூருலா (குறிப்புரையுடன்) | 4—0 | 1—9 |
| 51 | சீகாழித் தலவரலாறு | 2—9 | 0—9 |
| 52 | மெய்கண்ட சாத்திரம் | 8—0 | 3—0 |
| 53 | திருக்கற்குடித் தலவரலாறு | 3—6 | 0—9 |
| 54 | நீதிநெறிவிளக்கம் | 8—0 | 4—3 |
| 55 | திருவாரூர் நான்மணிமாலை | 2—0 | 1—0 |
| 56 | சகலகலாவல்லிமாலை | 1—0 | 0—9 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். எல்லோரும் எளிதில் பெற்றுப் படித்துணரவேண்டுமென்ற கருத்தில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவ தால் மணியார்டர் மூலமாவது, தபாற்றலைகள் மூலமாவது அஞ்சற்கூலி உள்பட அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முகவரி:- நூல்நிலையப்பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம் P.O.

## சமயப்பிரசாரம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரஆதீனத்துக்குச் சொ சுமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானத்தி 29-8-43 அன்று சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகப் பி சாரகர் திரு. P. C. சமரபுரிமுதலியார் அவர்கள் "சுந்தரர்" என்னு பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.